# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 03.04.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 19668/SCIC/2023**

திரு R. காந்தி மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
தேனி.
--- பொது அதிகார அமைப்பு

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 11.09.2023 தேதியிட்டு, பொதுத் தகவல் அலுவலர், சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், தேனி மாவட்டம் என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில், பத்திரப்பதிவுத் துறையால் வழங்கப்படும் வில்லங்க சான்றிதழில் Nature / தன்மை என்ற காலத்தில் "உரிமை மாற்றம்" என்பதற்குரிய விளக்கம், "இரசீது" என்பதை "உரிமை மாற்றம்" செய்வதற்கான பதிவுத்துறையின் வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் சட்ட ரீதியான விவரம் ஆகியவற்றை 2 இனங்களில் தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளார்.

2. பொதுத் தகவல் அலுவலரால் 05.10.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் 10.10.2023 தேதியிட்டு பிரிவு 19 (1)-ன்கீழ் முதல் மேல் முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார் மேல்முறையீட்டு அலுவலரால் 31.10.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் சட்டப்பிரிவு 19 (3)-ன்கீழ் 10.11.2023 தேதியிட்டு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 19668/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனு குறித்து மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. பொதுத் தகவல் அலுவலரால் 09.11.2024 தேதியிட்டு மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரால் உரிய தகவல்கள் வழங்கப்படவில்லையென்று தெரிவித்து 23.12.2024 தேதியிட்டு ஆணையத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளார். இந்நிலையில் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது காணொளிக்காட்சி வாயிலாக விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 03.04.2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய காணொளிக்காட்சி விசாரணைக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆஜராகுமாறு தெரிவித்து மனுதாரருக்கும், ஆணையத்தில் நேரடியாக ஆஜராகுமாறு தெரிவித்து பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்றைய காணொளிக்காட்சி விசாரணைக்கு மனுதாரர் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜரானார். பொதுத் தகவல் அலுவலர் சார்பாக திரு இரா. ஜெகதீஸ்வரன், உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம் தேனி ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

4. இன்றைய விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் 05.10.2023, 31.10.2023 மற்றும் 09.11.2024 ஆகிய தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதற்கான கடித நகல்களை விசாரணையின்போது ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் ஆணையத்தால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அவை ஏற்கத்தக்கதல்ல என்பதை ஆணையம் பதிவு செய்கிறது.

5. **எனவே, பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரின் கோரிக்கைளுக்கு திருத்திய / சரியான தகவல்களை 15 தினங்களுக்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு அனுப்பிவிட்டு, அந்த அறிக்கையுடன், மேற்படி தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையையும்**

**08.05.2025 அன்று பிற்பகல் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**((ஒம்/-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**வழக்கு எண். SA 19668/SCIC/2023**

**பொது அதிகார அமைப்பு:-**
பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
தேனி.

**மனுதாரர்:-**
திரு R. காந்தி,
த/பெ (லேட்) ராமசாமி,
166 A, தேனி மெயின்ரோடு,
கொடுவிலார்பட்டி அஞ்சல்,
தேனி வட்டம் மற்றும் மாவட்டம் 635 504

Copy to: File TK/PS